# தொகுதி மறுவரையறை: தமிழ்நாடெங்கும் கருப்புக்கொடிப் போராட்டம்!



நாடாளுமன்ற தொகுதிமறு வரையறை சட்ட திருத்த மசோதாவை கண்டித்து திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி கள்ளிமந்தயத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தனது வீட்டின் முன்பு கருப்புக் கொடி ஏற்றினார்.



நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஆலங்குளத்தில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் ஒன்றிய பா.ஜ.க.அரசின் தொகுதி மறு வரையறை மசோதாவுக்கு எதிராக கருப்புக் கொடி ஏற்றி மசோதா நகலை எரித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,ஆலங்குளம் ஒன்றிய செய லாளர்கள் செல்லத்துரை,சமுத்திரபாண்டியன், பேரூர் செயலாளர் நெல்சன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு கம்பம் தொகுதி கோம்பை பேரூர் பகுதியில் பாராளுமன்ற தொகுதி வரையறை சட்ட வரைவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கோம்பை பேரூர் செயலாளர் முருகன் ஏற்பாட்டில் மசோதா நகல் எரிப்பு மற்றும் எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பப்பட்டது மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தேனி வடக்கு மாவட்டம் குச்சனூர் பேரூர் பகுதியில் பாராளுமன்ற தொகுதி வரையறை சட்ட வரைவு எதிர்ப்பு தெரிவித்து குச்சனூர் பேரூர் செயலாளர் திலீப் குமார் ஏற்பாட்டில் மசோதா நகல் எரிப்பு மற்றும் எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பப்பட்டன மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கண்டன ஆர்ப்பாட்டம் அனைவரும் கருப்பு சட்டை அணிந்த நிலையில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன், முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் பொ.சிவபத்மநாதன், மா.செல்லதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கழக சட்டத்துறை துணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். கண்டன உரையை தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஷேக்தாவுது வாசித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசின் சட்ட நகல் தீ வைத்து கொளுத்தப்பட்டது.



சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் ஒன்றிய அரசைக் கண்டித்து சிவகங்கை மாவட்டச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கருப்புக் கொடி ஏற்றினார். உடன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் கொத்தமங்கலம் சேது மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் வகையிலான ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள தொகுதி மறுவரையறை சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கழக சொத்து பாதுகாப்பு குழு தலைவர் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தனது இல்லத்தின் முன்பு கருப்பு கொடியேற்றி எதிர்ப்பினை பதிவு செய்தார்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ ஆகியோர் ஆலோசனையின்படி வாடிப்பட்டி அண்ணா பேருந்து நிலையம் முன்பாக பேரூர் தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள தொகுதி மறுவரையறை சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பேரூர் கழக செயலாளர் மு.பால்பாண்டியன் தலைமையில், வடக்கு ஒன்றிய செயலாளர் பால ராஜேந்திரன் முன்னிலையில் கழகத்தினர் கருப்பு கொடியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உடன் கழக நிர்வாகிகள் வழக்கறிஞர் கார்த்திக், ஜெயகாந்தன், சிற்றரசு, முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தேனி வடக்கு மாவட்டம் பிசி பட்டி பேரூர் பகுதியில் பாராளுமன்ற தொகுதி வரையறை சட்ட வரைவு எதிர்ப்பு தெரிவித்து பிசி பட்டியில் பிசி பட்டி பேரூராட்சி தலைவர் வழக்கறிஞர் மிதின் சக்கரவர்த்தி ஏற்பாட்டில் மசோதா நகல் எரிப்பு மற்றும் எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பப்பட்டது வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. மகன் வழக்கறிஞர் நிஷாந்த், தலைமையில் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆசை தம்பி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கே.கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட கழக அலுவலக வளாகத்தில் ஒன்றிய பா.ஜ.க அரசின் தொகுதி மறுவரையறையை கண்டித்து சட்ட நகலை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை தொகுதி கழக வேட்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமையில் கொளுத்தப்பட்டது.இதில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.